# இணையத் தளங்களை பதிவு செய்வதற்கான வழிமுறைகள்

1. இணையத் தளம் சொந்தமான நபரின் பெயரிற்கு Domain Name பதிவு செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால் கம்பனிச் சட்டம் அல்லது வேறு அரச சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றின் பெயரில் Domain Name பதிவு செய்யப்படுமாயின் விண்ணப்பிக்கின்ற நபர் அந்த நிறுவனத்தின் உரிமையாளர், பங்குதாரர் அல்லது பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.
2. வெளிநாட்டிலுள்ள நபரொன்றிற்காக வேண்டி இந்த நாட்டிலுள்ள நபரொருவர் பதிவிற்காக வேண்டி விண்ணப்பிப்பாராயின் வெளிநாட்டிலுள்ள நபரினால் விண்ணப்பிக்கின்ற நபரிற்கு Attorney அனுமதிப் பத்திரதமொன்றின் ஊடாக அதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும்.
3. இணையத் தளத்தின் ஆசிரியர் 18 வயதிலும் பார்க்க உயர்ந்தவராக இருப்பதுடன், ஆகக் குறைந்தது துறையினுள் 05 வருட அனுபவம் மிக்கவராக இருத்தல் வேண்டும்.
4. பதிவிற்காக விண்ணபிக்கின்ற இணையத் தளத்திற்காக ஆகக் குறைந்தது 2500 எண்ணிக்கையிலான இணையத்தளப் பார்வையாளர்கள் இருக்க வேண்டும் என்பதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் முன் வைக்கப்பட வேண்டும்.
5. பதிவு செய்யப்படுகின்ற இணையத் தளத்தினுள் கடமையாற்றுகின்ற ஊடகவியலாளர்கள் இருப்பின் அவர்கள் தொடர்பான உண்மையான தவல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.
6. வெகுசன ஊடக விடயப்பரப்பிற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவையினால் பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், அமைச்சின் செயலாளரினால் நியமிகக்ப்பட்ட சுயாதீன கண்காணிப்புக் குழுவினால் உரிய விண்ணப்பங்கள் கண்காணிக்கப்படும்.
7. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இரண்டாவது மாதத்தில் 04வது வாரத்தின் வியாழக் கிழமை கண்காணிப்புக் குழு ஒன்றுகூடுவதுடன், உரிய விண்ணப்பங்கள் மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்படும்.
8. உரிய கண்காணிப்புக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படுகின்ற விண்ணப்பங்கள் உரிய மாதிரிப் படிவத்திற்கு இணங்க பூரணப்படுத்தப் பட்டிருக்க வேண்டியதுடன், முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
9. பதிவிற்காக வேண்டி விண்ணப்பிக்கின்ற இணையத் தளம் இதற்கு முன்னரான காலப்பகுதியில் அல்லது யாதுமொரு சட்டவியல் அடிப்படையின் கீழ் நிறுத்தப்பட்டிருந்தால் அந்த இணையத்தளம் நிராகரிக்கப்படும்.
10. முன்வைக்கப்படுகின்ற இணையத்தளத்தின் உள்ளடக்கம் இலங்கையின் தனித்துவம், கலாசாரம், தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், சமூகத்திற்கு பிரச்சினையாகும் எனக் கருதினால் சுயாதீன கண்காணிப்புக் குழுவின் இணக்கப்பாட்டுடன் நிராகரிக்கப்படும்.
11. முழுமையாக பூரணப்படுத்தப்படாததன் காரணமாக நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களுக்காக வேண்டி மீண்டும் ஒரு மாத கால வரையரைக்குள் விண்ணப்பம் கோரலாம்.
12. இணையத் தள பதிவுக் கால வரையரையானது வருடத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், அடுத்த வருடத்தினுள் மீண்டும் பதிவினை புதுப்பிக்க வேண்டும். மீண்டும் பதிவினை புதுப்பிக்கும் போது ஆகக் குறைந்தது 02 மாதங்களுக்கு முன்னர் மேற்கொள்வது கட்டாயம் ஆகும். அவ்வாறின்றேல் பதிவினை மீண்டும் புதிதாய் மேற்கொள்ள வேண்டும்.
13. நேர்முகத் தேர்விற்காக வேண்டி வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் விண்ணப்பத்துடன், முன்வைக்கின்ற அனைத்துச் சான்றிதழ்களின் முதற் பிரதி மற்றும் உறுதிப் படுத்தப்பட்ட நகல் பிரதிகளை எடுத்து வரவேண்டும்.
14. கண்காணிப்புக் குழுவிற்கு விண்ணப்பத்தினை கணிப்பீடு செய்யவதற்காக வேண்டி முன்வைக்கின்ற போது இணைப்பு I பிரகாரம் இணையத்தளம் தொடர்பான அறிக்கையொன்று முன் வைக்க வேண்டும்.
15. நேர்முகத் தேர்விற்காக வேண்டி வருகை தருகின்ற போது உங்களது சொந்த வதிவிடம் தொடர்பான கிராம சேவகரினால் சான்றுப் படுத்தப்பட்டு அதன் பிரதியினை எடுத்து வர வேண்டும்.